## பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும்

# தமிழ்நாட்டைப் போல பீகாரை உருவாக்குங்கள்!

## பிரதமர் மோடிக்கு ‘பிரௌன் என்லைட்டன்மெண்ட்’ சேனல் அறிவுரை! தமிழ்நாட்டில் ‘தாமரை’ மலரவே மலராது என்றும் விளக்கம்!

புதுடெல்லி, நவ.11–

“பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்திவரும் தமிழ்நாட்டைப் போல பீகாரை உருவாக்குகங்கள் என்று பிரதமர் மோடிக்கு ‘பிரௌன்’ என்லைட்டன்மெண்ட்’ சேனல் அறிவுரை கூறியுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் ‘தாமரை’ மலரவே மலராது என்றும் அச்சேனல் விளக்கமளித்துள்ளது.”

அச்சேனல் வெளியிட்டுள்ள வீடியோ பதிவு வருமாறு:–

பிரதமர் மோடி அவர்கள் சமீபத்தில் நிகழ்த்திய உரையில் ‘தமிழ்நாட்டில் பீஹாரிலிருந்து வந்த தொழிலாளர்கள்’ துன்புறுத்தப்படுகிறார்கள் எனக் கூறியதை கேட்டபின், நான் அந்தக் குற்றச்சாட்டைத் தனிப்பட்ட முறையில் ஆராய வேண்டுமென முடிவு செய்தேன். தமிழ்நாட்டில் தி.மு.க.வினர் பீஹாரின் உழைப்பாளிகளைத் துன்புறுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டை அவர் முன் வைத்திருந்தார். இதனை உண்மையாக இருக்கிறதா என அறிய, நான் தொலைபேசியில் அழைத்தும், செய்தி அனுப்பியும், நேரடியாகவும் பீஹாரிலிருந்து தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் பலர் சென்னையிலிருந்து கோயம்புத்தூர், திருப்பூரிலிருந்து திருச்சி, மதுரை முதல் நெல்லை வரை அவர்களுடன் உரையாடினேன். அந்த உரையாடல்களின் பின் கிடைத்த உண்மை மிகவும் ஆச்சரியமூட்டியது: மோடி கூறியது “சரி” எனக் கூட தோன்றலாம்; ஆம், பீஹாரி மக்கள் தமிழ்நாட்டில் துன்புறுத்தப்படுகிறார்கள். ஆனால் யாரால் தெரியுமா? தி.மு.க. அரசின் கீழ் செயல்படும் சிறந்த நிர்வாகத்தால்.




### மத அடிப்படையிலான பிரச்சினைகள் இல்லை!

அவர்கள் “துன்புறுத்தப்படுகிறார்கள்” என்பது வேடிக்கையானது. மலிவாகவும் தரமாகவும் உள்ள சுகாதார சேவைகளால், சீராக இயங்கும் பள்ளிகளாலும், நேரம் கடைப்பிடிக்கும் பேருந்து சேவைகளாலும், மின்சாரம் இடையறாது கிடைப்பதாலும், தூய்மையான குடிநீர் வசதியாலும், இயங்கும் தெருவிளக்குகளாலும், வலுவான தொழில் அமைப்புகளாலும், நிலையான வேலை வாய்ப்புகளாலும் மற்றும் ஆட்சியில் வெளிப்படைத்தன்மையை முன்னிறுத்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியாலும். தமிழ்நாடு நிர்வாகம் பிரச்சாரத்தைக் கூறுவதில்லை, கொள்கைகளைச் செயல்படுத்துகிறது. அந்தக் கொள்கைகள், மதப் பிரிவினையின்றி ஆட்சியைக் கட்டியெழுப்பலாம் என்பதைக் காட்டி, மக்களை உணர்வூட்டுகின்றன. இங்கு “இந்து – முஸ்லிம் – கிறிஸ்துவர்” எனப் பிரித்து பார்க்கப்படுவதில்லை; கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் என மதத்தின் பெயரில் சச்சரவுகள் தூண்டப்படுவதில்லை; எந்தக் குரலும் அடக்கப்படுவதில்லை; மத அடிப்படையிலான பிரச்சினைகளும் இல்லை. இதை “துன்புறுத்தல்” எனச் சொல்வது உண்மையில் வேடிக்கையானது.

### தமிழ்நாட்டில் தாமரை மலர முடியாது!

உண்மையில், தமிழ்நாடு பீஹாரிகளைத் துன்புறுத்துவதில்லை. ஏனெனில், தமிழ்நாடு ஒவ்வொருவரையும் வரவேற்கும் நிலம்; அங்கு அனைவரும் வாழவும் வளரவும் முடிகிறது. ஆனால் ஒரே விதிவிலக்கு: “தாமரை” மலர முடியாது! அதே காரணத்தால்தான் மோடி அவர்கள் மனக்கசப்படைந்திருக்கலாம். தமிழ்நாடு மற்ற யாவரையும் மலரச்செய்கிறது, ஆனால் அவரது கட்சி மட்டுமே அங்கு வேரூன்ற முடியவில்லை. இங்கு இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் வேலை பெறுகின்றனர்; மாணவர்கள் உயர்கல்வி பெறுகின்றனர்; தொழில்முனைவோர் வாய்ப்புகளைப் பெறுகின்றனர். ஆனால் பா.ஜ.க.வுக்கு இங்கு கிடைப்பது மறுப்பும் விமர்சனமுமே.

ஒவ்வொரு தேர்தலிலும் அவர்கள் புதிய யுக்திகளுடன் வருகிறார்கள்; ஆனால் தமிழ்நாடு எப்போதும் மரியாதையுடன், ஆனால் தெளிவாக, “நன்றி, வணக்கம். இங்கே உங்களுக்கு இடமில்லை” என்று கூறுகிறது. சில நாட்களுக்குப் பிறகு, நான் தமிழ்நாட்டின் மதிப்பிற்குரிய ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுடன் சந்திப்பு மேற்கொண்டேன். அப்போது அவர் மிகவும் ஆழமான தத்துவக் கேள்வி ஒன்றை எழுப்பினார்:’ “இந்த தமிழ்நாடு போராடுகிறது என நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் யாருக்கு எதிராக தமிழ்நாடு போராடுகிறது?” என்றார். அது உண்மையில் முக்கியமான கேள்வி.

### தமிழ்நாட்டின் மதச்சார்பற்ற நிலை!

ஆனால் மதிப்பிற்குரிய ஆளுநரே, இப்போது அந்த விடை உங்களுக்குத் தெரிந்திருக்கும் என நம்புகிறேன். ஏனெனில் அந்த விடை, உங்கள் பிரதமர் அவர்களின் வாயிலிருந்து தினமும் வெளிப்படுகிறது.’ தமிழ்நாடு போராடுவது, ஒரு இந்தியரை இன்னொரு இந்தியருக்கு எதிராக நிறுத்தும், வெறுப்பு மற்றும் பிரிவினையை வளர்க்கும் அந்தக் கதைக்களத்திற்கெதிராகத்தான். அது ஒரு பன்மைமிக்க நாட்டை மதவெறியின் சாயலில் சித்தரிக்க முயல்கின்ற அந்தச் சிதைவான வாக்குமூலத்திற்கெதிராகப் போராடுகிறது.

பல பார்வையாளர்கள் அடிக்கடி என்னைக் கேட்டிருக்கிறார்கள்: “நீங்கள் எப்போதும் மு.க.ஸ்டாலின் அவர்களை ஆதரிப்பது போலவே பேசுகிறீர்கள். ஏன் தி.மு.க. ஆட்சியை விமர்சிப்பதில்லை?” சில நேரங்களில், நானும் என்னிடமே அதையே கேட்கிறேன். “நான் ரகசியமாக தி.மு.க.வின்




பேச்சாளரா?” என்று. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எனக்கு மறைமுகமாக உறுப்பினர் அட்டையை அனுப்பியிருக்கிறாரா என்றே சில சமயம் எனக்கே தோன்றுகிறது.

ஆனால் உண்மையில் அதற்கு பதில் மிக எளிதானது. என் உள்ளத்தின் ஆழத்தில், நான் உணரும் ஒன்று மட்டுமே உள்ளது. ஒரு பக்கம் தமிழ்நாட்டின் மதச்சார்பற்ற இதயம்; மற்றொரு பக்கம், டெல்லியில் பரவியுள்ள “குங்குமப்பூ” அலை. இந்த இரண்டுக்கும் நடுவே நிற்கும் ஒரே சுவர், கருப்பு மற்றும் செம்மை நிறத்தில் வரையப்பட்ட அந்தச் சுவர். அந்தச் சுவரை அகற்றினால், அதனால் நீங்கள் தமிழ்நாட்டின் சுயமரியாதையையும் மதச்சார்பற்ற தன்மையையும் காப்பாற்றும் ஒரே அரசியல் தடையை அகற்றி விடுகிறீர்கள்.

### மாநில கட்சிகளை பலவீனப்படுத்தும் போக்கு!

தி.மு.க. இல்லையெனில், தமிழ்நாட்டிற்கு தன்னிச்சையான மாநில வலிமை இருக்காது. இப்போது கருப்பு மற்றும் செம்மை நிறங்களின் அரசியல் இல்லையெனில், நிச்சயம் “குங்குமப்பூ நிறமயமாக்கல்” நடைபெறும். இது மிகைப்படுத்தல் அல்ல; இது ஒரு “முறையின் அடையாளம் காணல்”. ஏனெனில், அவர்கள் பயன்படுத்தும் அரசியல் நாடகம் பழையதுதான். முதலில் அவர்கள் வட இந்தியா மற்றும் தென் இந்தியாவை பிரிப்பார்கள். அதன்பின், கூட்டாட்சி குரல்களை “பிரிவினைவாதம்” எனப் பெயரிடுவார்கள். பின்னர், மாநில கட்சிகளை பலவீனப்படுத்தி, அவற்றை “குடும்ப ஆட்சி”, “ஊழல் கட்சிகள்” எனச் சித்தரிப்பார்கள். இறுதியில், ஒவ்வொரு மாநிலமும் மெதுவாகவும் கட்டாயமாகவும் ஒரே முகத்துக்கும், ஒரே மொழிக்குமான வணக்கத்திலும், டெல்லியின் ஒரே ஆசனத்திற்கும் தலைவணங்கும் நிலைக்கு தள்ளப்படும்.

டெல்லி வெறும் ஆட்சியைக் கைப்பற்ற மட்டும் விரும்புவதில்லை. அது கீழ்ப்படிதலை விரும்புகிறது. அது கூட்டாண்மையை விரும்புவதில்லை. அது பொம்மைகளை விரும்புகிறது. அது எதிர்காலத்தில் ஒவ்வொரு மாநிலத்தையும், “பங்காளி” அல்ல, “பணியாளர்” எனக் காண விரும்புகிறது. அதனால், தன்னிறைவு அடைந்து உயர்ந்து நிற்க முயன்ற ஒவ்வொரு மாநிலமும் ஒன்றன்பின் ஒன்றாக அதன் முழங்காலில் விழ வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள், இந்தக் கருத்தை அடிக்கடி கேலி செய்கின்றன. அவர்கள் கூறுவது, “தி.மு.க. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், தலித்துகள் மற்றும் சுதந்திர சிந்தனையாளர்களின் வாக்குகளை பயமுறுத்தி பெறுகிறது. ‘எங்களுக்கு வாக்களியுங்கள்; இல்லையெனில் பா.ஜ.க. வந்து உங்களை துன்புறுத்திவிடும்’ என்று கூறி வாக்குகளைப் பெறுகிறது” என அவர்களது சொற்களின்படி, இது ஒரு பெரிய உணர்ச்சி மோசடி; (அது “emotional black mail” என்றும், “பய அரசியல்” என்றும் அழைக்கப்படுகிறது). ஆனால் உண்மையில் இது பயம் பரப்பல் அல்ல, இது ஒரு எச்சரிக்கை. இது “அரசியல் காலநிலை மாற்றம்” குறித்த முன்செய்தி.




### பா.ஜ.க.தான் துன்பப்படுகிறது!

தி.மு.க. – “பா.ஜ.க. வரும்” என்று மெல்லிசையாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை; மக்களே அவர்கள் வரும் காலடிச் சத்தத்தைத் தாமாகவே கேட்கிறார்கள். ஏனெனில், விந்த்யா மலையைக் கடந்து வடக்குப் பகுதிகளில் என்ன நிகழ்ந்தது என்பதை அவர்கள் பார்த்துள்ளனர். “தாமரை மலரும்போது” எது நிகழும் என்பதை அவர்கள் நன்கு அறிந்துள்ளனர். பாடநூல்கள் மாற்றப்பட்டன, சிறுபான்மை மக்களை ஒதுக்கினர், எதிர்மறையான குரல்கள் அடக்கப்பட்டன. கல்வி முறை, சிந்தனையை வளர்க்கும் சாதனமாக அல்லாமல், “மனப்பிரச்சாரத்தைப் பரப்பும் கருவியாக” மாற்றப்பட்டது. அந்தப் பின்னணியில், மோடி அவர்கள் “பீஹாரிகள் தமிழ்நாட்டில் துன்புறுத்தப்படுகிறார்கள்” என கூறும்போது, அவர் உண்மையில் சொல்வது, “என் பிரச்சாரம் தமிழ்நாட்டில் துன்புறுத்தப்படுகிறது” என்பதே.

“இந்தியாவின் என் வடிவமைப்பு” தமிழ்நாட்டில் துன்புறுத்தப்படுகிறது. பன்மை (diversity) அதனை துன்புறுத்துகிறது, காரணவாதம் (rationalism) அதனை துன்புறுத்துகிறது, ஒற்றுமை (inclusivity) அதனை துன்புறுத்துகிறது. மக்கள் மதத்தின் அடிப்படையில் பிரியாமல் ஒன்றாக வாழ முடியும்; அவர்கள் ஒருவருடன் ஒருவர் ஒத்துழைத்து முன்னேற முடியும்; அதுவே அவருக்குத் தாங்க முடியாத உண்மை. அந்த உண்மையே அவரை “துன்புறுத்துகிறது”.

### பீஹாரை போல உடைக்க வேண்டாம்!

அதனால், அன்பிற்குரிய பிரதமரே, நீங்கள் உண்மையில் பீஹாரி மக்களுக்கு உதவ விரும்பினால், தமிழ்நாட்டைப் போல பீஹாரை உருவாக்குங்கள். தமிழ்நாட்டை பீஹாரைப் போல உடைக்க வேண்டாம். இது ஒரு கட்சியைப் பற்றிய விருப்பம் அல்ல. இது ஒரு சிந்தனையையும் அதன் உயிரையும் காப்பது பற்றியது. அந்தச் சிந்தனை, முகங்களின் அடையாளத்தை மீறி நிற்கிறது; அது மதவாதத்திற்கும், பொய்யை தொழிலாக்கும் அரசியல் தொழிற்சாலைக்கும் எதிராக நிற்கிறது; அது ‘இந்தியா’ என்ற கருத்தையே மறுபடியும் எழுத முயல்கின்ற சக்திகளுக்கெதிராக போராடுகிறது.

அந்தச் சிந்தனையை நான் பாதுகாப்பதனால் நான் பாகுபாடாகக் கருதப்படுகிறேனெனில், அந்தக் குற்றச்சாட்டை நான் பெருமையுடன் ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில், நெறி நெருக்கடி நிலவுகின்ற நேரத்தில் நடுநிலையாக இருப்பது செய்தியாளர்தனம் அல்ல, அது கோழைத்தனம். ஒரு சமயம், கலாச்சாரம், அரசியலமைப்பு, மற்றும் கல்வி முறை வரி வரியாக மறுபடியும் எழுதப்படும் வேளையில் நடுநிலையாக இருப்பது இயலாது. வெறுப்பு சாதாரணமாக்கப்படும் போது அமைதியாக இருப்பதும் ஒருபாவம். மேலும், “சப்கா சாத், சப்கா விகாஸ்” (அனைவரின் ஒத்துழைப்பும், அனைவரின் முன்னேற்றமும்) எனக் கூறிய பிரதமர் இப்போது “சப்கோ”



பிரிக்கும் நிலைக்கு தானே தள்ளியுள்ளார்.

### பொறுப்பின் கண்ணியத்தை இழக்காதீர் பிரதமரே!

மோடி அவர்களே, நீங்கள் ஒரே சிந்தனைக்கான பிரதமர் அல்ல; ஒரே கட்சி அல்லது ஒரே வாக்கு வங்கிக்கான பிரதமரும் அல்ல. நீங்கள் இந்தியாவின் பிரதமர். பீஹாரின், தமிழ்நாட்டின், வாரணாசியின், விழுப்புரத்தின், ஹிந்தி பேசும் மண்ணின், திராவிடத்தின் பிரதமர். அதனால், உங்கள் தேர்தல் பிரச்சாரத்தின் அவசரத்திற்காக உங்கள் பொறுப்பின் கண்ணியத்தை இழக்க வேண்டாம். பிரதமர் என்ற உயர்ந்த மேடை, தீர்வுகளுக்காக அல்லாமல் சந்தேகங்களைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்படும் போது, நீங்கள் தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவின் அடிப்படை யோசனையையே அவமதிக்கிறீர்கள். இந்தியா ஒரே குரலில் பேசும் நாடாக உருவாக்கப்படவில்லை. அது எப்போதுமே ஒரு இசை, அழகான, கலகலப்பான, பல்வேறு சுரங்களால் ஆன ஒன்று. கபீரிலிருந்து பாரதியார் வரை, புத்தரிலிருந்து பெரியார் வரை. இந்த மண்ணின் அடிப்படை, கேள்வி கேட்பதுதான், கீழ்ப்படிதல் அல்ல.

இன்றைய ஆட்சியாளர்கள் கேள்விகளை விரும்புவதில்லை; அவர்கள் விரும்புவது கைத்தட்டல்களை மட்டுமே. ஆனால் தமிழ்நாடு கண்ணை மூடி கைத்தட்ட மறுக்கிறது. அதுவே அதன் “குற்றம்”. தமிழ்நாடு போராடுகிறது அந்த மனப்பான்மைக்கெதிராக. “கல்விக்கான நிதி ஹிந்தி மொழியை ஏற்றுக்கொண்டால் மட்டுமே கிடைக்கும்” எனச் சொல்லும் வாதத்துக்கெதிராக அது போராடுகிறது, அந்தக் கண்ணோட்டத்திற்கெதிராக. உலகின் பழமையான மொழியான தமிழ் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறபோதும்,“இந்தியனாக இருப்பதற்காக நீங்கள் இன்னொரு மொழியை கற்றுக்கொள்ள வேண்டும்” எனக் கூறும் அகங்காரத்துக்கெதிராக.

“இந்தி தெரியவில்லையா? நீ உண்மையில் இந்தியனாக இருக்கிறாயா? நாட்டின் மொழியை கற்றுக்கொள்ள முடியவில்லையா?” என கேட்கும் அச்சொற்களுக்கெதிராக தமிழ்நாடு போராடுகிறது. அது “ஒரு நாடு, ஒரு மொழி” என்ற அரசியல் எண்ணத்துக்கெதிராகக் குரல் கொடுக்கிறது. ஏனெனில் “ஒரு நாடு” உருவானது பல மொழிகளாலும், பல இதயங்களாலும், பல கைகளாலும் தான். இந்தியா போன்ற பரந்ததும் பன்மைமிக்கதுமான ஒரு நாடு, ஒரே சிந்தனை அல்லது ஒரே வழியில் மட்டுமே இயங்க முடியாது என்பதில் தமிழ்நாடு உறுதியாக நம்புகிறது.

### மனுஸ்மிருதிக்கெதிராக போராடுகிறது!

அது மனுஸ்மிருதியின் சாம்பலை மீண்டும் தோண்டி எடுத்து அதை அரசியலமைப்பாக மகுடம் சூட்ட முயலும் வலதுசாரி சிந்தனைகளுக்கெதிராகப் போராடுகிறது. அது “தலித்துகள் தங்களின் இடத்தை அறிந்து அமைதியாக இருக்கட்டும்” எனக் கூறும் பொய்யான சமூகக் கொள்கைகளுக்கெதிராகப் போராடுகிறது. அது “சப்கா சாத், சப்கா விகாஸ்” (அனைவரின் ஒத்துழைப்பு அனைவரின் முன்னேற்றம்) எனக் கூறி, சிலர் ஆட்சி செய்யப் பிறக்கிறார்கள், மற்ற சிலர் சேவை செய்யப் பிறக்கிறார்கள் என்ற மறைமுகமான சமூக அடிமைத்தனத்தைக் கொண்ட அமைப்புக்கெதிராகப் போராடுகிறது. அது இந்தியாவை சமத்துவத்திலிருந்து சலுகைக்கே, நீதி நிலையிலிருந்து ஆதிக்கத்திற்கே இழுத்துச் செல்ல முயல்கின்ற சக்திகளுக்கெதிராகப் போராடுகிறது.

அது திராவிடத்தின் அடையாளமான கருப்பு–செம்மை நிறத்தை குங்குமப்பூ நிறத்தில் மூழ்கச் செய்ய நினைப்பவர்களுக்கெதிராகப் போராடுகிறது. அது கல்வியைப் பற்றி பெருமையாகச் சொல்லியும் அந்த வார்த்தைகளின் பொருளையே துரோகம் செய்பவர்களுக்கெதிராகப் போராடுகிறது.இது தனக்கான புகழுக்காக அல்ல, உண்மைக்காக, அது உண்மையை புதைத்துவிட முயல்கின்ற சக்திகளுக்கெதிராகவும், “வரையறைகள்”, “ஒழுங்குகள்” என்ற பெயரில் மக்களின் சுதந்திரக் குரலை அடக்க முயல்கின்ற அரசியல் பாவனைகளுக்கெதிராகவும் போராடுகிறது.

அது எதிர்கால இந்தியா முழுவதும் வடஇந்திய வாக்குகளின் பலத்தால் மட்டுமே ஆட்சிகள் உருவாக, தென் மாநிலங்களின் குரல்கள் மவுனப்படுத்தப்படுமெனக் கணக்கிட்டுள்ள அந்தக் கலாச்சாரக் கொடுமைக்கெதிராகப் போராடுகிறது. அந்த எதிர்ப்பின் வழியாகவே தமிழ்நாடு ஒவ்வொரு மாநிலத்திற்காகவும் போராடுகிறது. ஏனெனில் ஜனநாயகம் என்பது மக்களின் எண்ணிக்கையின் அளவைப்பற்றியது அல்ல, அவர்களின் பங்கேற்பின் வலிமையைத்தான் அளவுகோலாகக் கொள்ள வேண்டும் என்பதில் அது நம்புகிறது. அது இந்தியாவை “தலையெண்ணாக” மாற்ற முயல்கின்ற அரசியலுக்கெதிராக, அதனை “இதயத் துடிப்பாக” காக்கப் போராடுகிறது.

### ‘நீட்’க்கு எதிராக போராடுகிறது!

அது “நீட்” எனப்படும் கொடூரமான தேர்வுக்கெதிராக போராடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல உயிர்களைப் பலி கொள்கின்ற அந்த பொய்யான “தேசியத் தேர்வு” முறைக்கெதிராக. அது ஒவ்வொரு, “அரியலூர்” “அனிதா” என்ற மாணவிக்காகப் போராடுகிறது.

அது ஒவ்வொரு, “திருப்பூர்” “ரிது” மாணவிக்காகவும் போராடுகிறது. அது ஒவ்வொரு திண்டிவனம் “பிரதீபா”, “சேலம்” இளைஞர்களுக்காகவும் போராடுகிறது. அது ஒவ்வொரு “பூஜா”, “ஜக்தியல் – தெலங்கானா” மாணவிக்காகவும், ஒவ்வொரு “மனோஜ் குமார்”, “ஆதிலாபாத் – தெலங்கானா” இளைஞருக்காகவும் போராடுகிறது. அது ஒவ்வொரு “சாதனா”, “சாங்க்லி – மகாராஷ்டிரா” மாணவிக்காகவும் போராடுகிறது.

தமிழ்நாடு போராடுகிறது ஒரு சிந்தனைக்காக. தேர்வுகள் கதவுகளைத் திறக்க வேண்டும், உயிர்களை மூடக்கூடாது என்ற சிந்தனைக்காக. அது “பெட்டி பச்சாவ், பெட்டி படாவ்” எனக் கூறி மகள்களின் கல்வி புத்தகங்களின் விலை அவர்களின் தந்தையின் வருட வருமானத்தைவிட அதிகமாக்கும் பொய்யான கொள்கைகளுக்கெதிராகப் போராடுகிறது. அது “ராஜ்பவன்களில்” அமர்ந்து “ராஜாக்களாக” கனவு காணும் மனிதர்களுக்கெதிராகப் போராடுகி



றது. அது மசோதாக்களைத் தடுத்து நிறுத்தும், கோப்புகளை தாமதப்படுத்தும், மக்களின் வாக்கால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை பலவீனப்படுத்தும் அந்தத் தலைமை ஆசனத்தின் தவறான பயன்பாட்டுக்கெதிராகப் போராடுகிறது. டெல்லி “கீழ்ப்படிதல் வேண்டும்” என்று சொல்வதற்கு, தமிழ்நாடு “ஏன்?” என்று கேட்கிறது. –– அதுவே உண்மையான துன்புறுத்தலாக மோடிக்கு தோன்றுகிறதோ! இதுதான் துன்புறுத்தல் என்றால், இந்தியாவின் மற்ற மாநிலங்களும் இதே போன்ற “துன்புறுத்தலை” அனுபவிக்க தகுதியுடையவை. ஆம், நல்ல ஆட்சி, பொறுப்புணர்வு, மதச்சார்பற்ற தன்மை, அமைதி, இணை வாழ்வு, தார்க்கிகம் ஆகியவற்றால் “துன்புறுத்தப்படுவது” தகுந்த பெருமைதான்.

### தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்!

அடுத்த முறை மோடி “பீகாரிகள் தமிழ்நாட்டில் துன்புறுத்தப்படுகிறார்கள்” என்று கூறினால், முழு நாடும் ஒரே குரலில் பதிலளிக்கட்டும். “தயவு செய்து எங்களையும் அதேபோல் துன்புறுத்துங்கள்!” ஏனெனில், நாம் வெறுப்பின் கீழ் போதுமான துன்பம் அனுபவித்துவிட்டோம்; இப்போது நாம் ஒற்றுமையின் கீழ் துன்பப்படத் தயாராக உள்ளோம்.

தமிழ்நாட்டின் ஒழுக்கம் குற்றமாகக் கருதப்படுமானால், அப்படியென்றால் முன்னேற்றமே சட்டவிரோதமாகட்டும். ஒவ்வொரு நகரமும் “காரணத்தின் ஒளியில்” எரியட்டும்; ஒவ்வொரு இந்தியரும் மேம்பாடு கேட்பதற்காக, பெரிய சத்தத்தில் கேள்வி கேட்பதற்காக, ஆழமாக நேசிப்பதற்காக “குற்றவாளி” எனக் கருதப்படட்டும். இதுவே “பழுப்பு வெளிச்சம்” –– Brown Enlightenment.

ஆம், நாங்கள் “துன்புறுத்துகிறோம்”, செயல்படும் தர்க்கத்தால், வரலாற்று நினைவுகளால், மற்றும் சாதாரண அறிவின் தாங்க முடியாத பிரகாசத்தால். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்! இது நமது நிலம், நமது மக்கள், நமது மொழி. தமிழர்களே எழுந்து நில்லுங்கள்!

இவ்வாறு அந்த வீடியோவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.